# யாழ்ப்பாண மக்களின் வாழ்வு பசுமையானதாக அமையவேண்டும்



## யாழ். இந்திய துணைத் தூதுவர் தெரிவிப்பு

பசுமை நிறைந்த யாழ்ப்பாண மண்ணைப் போல மக்கள் வாழ்வும் எப போதும் பசுமையாக இருக்க வேண்டும் என இலங்கைக்கான யாழ். இந்தியத் துணைத்தூதுவா ஏ.நடராஜன்தெரிவித்தார்.

யாழ்ப்பாண றோட்டறிக் கழகத்தின் ஏற்பாட்டில் கலாசார பொங்கல் விழா நேற்று முற்றவெளியில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித் தார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில்,

இன்றைய இந்த அற்புதமான நிகழ்வினை ஒழுங்குபடுத்தியமைக்கு முதலில் நான் நன்றி களை தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

நான் இதை எதிர்பார்க்கவில்லை. கிராமத்திற்கு போனது போன்ற உணர்வு தோன்றுகின்றது. யாழ்ப் பாணம் என்ற பொன்னான மண்ணில் நான் காலடிகள் எடுத்து வைத்து 10 நாட்களே ஆகிறது. இந்த 10 நாட்களும் நான் யாழ். நகர்ப்பகுதியை விட்டு சற்று வெளியே சென்று பார்வையிட்டேன். மிகவும் அழகிய பசுமையான பூமி இது.

பாப்பரசரின் வருகைக்காக மன்னார் சென் றேன் அப்போது வழிகளில் அழகிய காட்சிகள் பசுமையான நெல் வயல்கள் மகிழ்ச்சியை தந்தன. இந்த பசுமையை போல தமிழ் மக்களின் வாழ்வும் எப்போதும் பசுமையாக இருக்க வேண்டும் என நான் வாழ்த்துகிறேன். தை பிறந்தால் வழி பிறக் கும் என்பார்கள். அது போல உங்களுக்கு நல்ல வழி கிடைக்கட்டும்.

தமிழ் மக்கள் அனைவருக்கும் நான் இந்த சந்தர்ப்பத்தில் வணக்கத்தையும் வாழ்த்துக்களை யும் தெரிவிக்கிறேன் என அவர் மேலும் தெரிவித் தார்.

இந்நிகழ்வில் றோட்டறிக் கழகத்தின் மாவட்ட ஆளுநர் திருமதி எஸ்.கௌரிராஜன், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். தொடர்ந்து பல கலை நிகழ்வுகள் நடைபெற்றன. (25. பா)